**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 56** **நாள்: 19.05.2017**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 70 சென்னை உயர்நிலைப்பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அதில் 2016–2017–ஆம் கல்வி ஆண்டில் நடைபெற்ற 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 3,028 மாணவர்கள், 3,274 மாணவியர்கள் என மொத்தம் 6,302 மாணவ / மாணவியர்கள் தேர்வு எழுதினர். அதில் 2,697 மாணவர்களும், 3,168 மாணவியர்களும் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதம் **93.1 %** ஆகும்.

இவ்வாண்டில் 20 பள்ளிகள் 100% தேர்ச்சி பெற்றுள்ளது. இது கடந்தாண்டைவிட ஒரு பள்ளி கூடுதலாகும். 189 மாணவ/மாணவியர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இது கடந்தாண்டைவிட 111 மாணவ/மாணவியர்கள் கூடுதலாகும். 312 மாணவ/மாணவியர்கள் 450 மதிப்பெண்களுக்குமேல் பெற்றுள்ளனர். இது கடந்தாண்டைவிட 63 மாணவ/மாணவியர்கள் கூடுதலாகும்.

நடப்பு தேர்வு வெளியீட்டில், 100% தேர்ச்சி பெற்ற 20 பள்ளிகளின் விவரங்கள்

| | |
|---|---|
| 1 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, கொடுங்கையூர்** |
| 2 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, அரிநாராயணபுரம்** |
| 3 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, எஸ்.என்.செட்டி தெரு** |
| 4 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, (தெலுங்கு) ஆஞ்சேநேய நகர்** |
| 5 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, வால்டாக்கீஸ் சாலை** |
| 6 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை** |
| 7 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, கொய்யா தோப்பூ** |
| 8 | **சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மார்க்கெட் தெரு** |
| 9 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, கீழ்பாக்கம்** |
| 10 | **சென்னை மேல்நிலைப்பள்ளி, சுப்புராயன் தெரு** |
| 11 | **சென்னை உயர்நிலைப்பள்ளி , டி.வி. புரம்** |
| 12 | **சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்** |
| 13 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, வி.பி.கோயில் தெரு** |
| 14 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, வன்னிய தேனாம்பேட்டை** |
| 15 | **சென்னை உயர்நிலைப்பள்ளி கே.பி. ரோடு** |
| 16 | **சென்னை உயர்நிலைப்பள்ளி, கெனால் பேங்க் ரோடு,** |
| 17 | **சென்னை மேல்நிலைப்பள்ளி, ஆழ்வார்பேட்டை,** |
| 18 | **சென்னை உயர்நிலைப்பள்ளி , ஜாபர்கான்பேட்டை** |
| 19 | **சென்னை உயர்நிலைப்பள்ளி , கோயம்பேடு** |
| 20 | **சென்னை உயர்நிலைப்பள்ளி கோட்டூர்** |

10ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், துணை ஆணையர் (கல்வி) அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**